இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 02-08-2023

# ராஜபக்சேவும் பா.ஜ.க.வும் - 1

இலங்கைப் பிரச்சினையைப் பற்றி பேசி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

**“இரத்தக்கறை படிந்த ராஜபக்சேவை தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் அனைவரது எதிர்ப்பையும் மீறி 2014 ஆம் ஆண்டு நரேந்திரமோடியின் பதவி ஏற்பு விழாவுக்கு அழைத்தவர்களுக்கு இலங்கைப் பிரச்சினையைப் பற்றி பேச உரிமை உண்டா?”** என்று பதில் கேள்வியை எழுப்பி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அமித்ஷாவிடம் இருந்து இதற்கான பதில் வராது. ஏனென்றால் குடியுரிமைச் சட்டம் என்ற பெயரால் இலங்கைத் தமிழர்களை வஞ்சிக்க முயற்சித்தவர் இதே அமித்ஷா அவர்கள்தான். அதனை தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

* பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்படும் குடியுரிமைச் சட்டம் இலங்கைத் தமிழர்களைப் பாதிக்கும் என்று தி.மு.க. வாதிட்டது. ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து வாங்கி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதனை பா.ஜ.க. கண்டுகொள்ளவே இல்லை. இந்த சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு பதில் மனு தாக்கல் செய்த பா.ஜ.க., இலங்கைத் தமிழர் பற்றி அதில் எதுவுமே சொல்லவில்லை.

இந்தியாவுக்குள் யார் எல்லாம் வரலாம், வந்தால் யாருக்கெல்லாம் குடியுரிமை வழங்கப்படும் என்று இந்த சட்டம் வரையறுக்கிறது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்க தேசத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்கிறார்கள். அந்த நாட்டைச் சேர்ந்த இசுலாமியர்கள் நீங்கலாக மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்கிறார்கள். இசுலாமிய சிறுபான்மையினரை எதற்காக புறக்கணிக்க வேண்டும்?

பாகிஸ்தானில் இருந்து, வங்க தேசத்தில் இருந்து, ஆப்கானிஸ்தானத்தில் இருந்து இசுலாமியர் நீங்கலான மற்ற மதத்தவர்கள் வரலாம் என்றால் அண்டை நாடான இலங்கையைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு தடை விதித்தது ஏன்? இதுதான் ஈழத்தமிழர்க்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம். இதனால்தான் இந்த குடியுரிமைச் சட்டத்தை தமிழர்கள் அனைவரும் எதிர்த்தோம்.

அண்டை நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குகிறோம் என்றால் இலங்கை அண்டை நாடு அல்லவா? இலங்கையைப் புறக்கணித்தது ஏன்? மற்ற அண்டை நாட்டைச் சேர்ந்த இந்துக்கள் வரலாம் என்றால் ஈழத்தில் இருக்கும் தமிழர்களை இந்துக்களாக இந்த பா.ஜ.க. அரசு நினைக்கவில்லையா?

தமிழ்நாட்டில் சுமார் 70 ஆயிரம் ஈழத்தமிழர்கள் அவர்களுக்கான வாழ்விடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் 1983ஆம் ஆண்டு வந்தவர்கள் முதல் 2002 ஆம் ஆண்டு வந்தவர்கள் வரை இதில் இருக்கிறார்கள். இவர்களால் மீண்டும் இலங்கைக்குச் செல்ல முடியாது. அவர்களுக்கு தாய்த்தமிழ்நாடு தானே அடைக்கலம் தர முடியும்? அவர்களுக்கு குடியுரிமை தர முடியாது என்று மறுத்தவர்தான் அமித்ஷா. இப்படி இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் உரிமையைப் பறித்த அமித்ஷாதான், இலங்கைத் தமிழர்கள் பற்றி இப்போது பேசுகிறார்.

என்ன கொடுமை இது?!

* 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமர் ஆனார் நரேந்திரமோடி. அப்போது அவரை அதிகமாகப் பாராட்டியது ராஜபக்சே சகோதரர்கள் தான்.

* இலங்கை ராஜபக்சே அரசாங்கமானது போர்க்குற்ற அரசாகவும், மனித உரிமை மீறல் அரசாகவும் ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராக 2014 ஆம் ஆண்டு முதல் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா பா.ஜ.க. அரசு?

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவி பிள்ளை, இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, ஐ.நா. விசாரணைக் குழுவை நியமித்தார்.

இலங்கையின் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை நடத்த உள்ள இந்த ஐ.நா. குழுவிலே 3 நிபுணர்களும், 13 உறுப்பினர்களும் இடம் பெற்று இருந்தனர். இந்த ஐ.நா. விசாரணைக் குழு இந்தியாவுக்குள் வந்து விசாரணை நடத்த எதிர்ப்பு தெரிவித்து இந்தியா அவர்களுக்கு விசா வழங்க மறுத்து விட்ட சம்பவம் 2014 ஆம் ஆண்டு சூலை மாதம் நடந்தது.

**“ ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு இந்தியா விசா வழங்க மறுத்திருப்பது சிங்களப் பேரினவாத ராஜபக்சேவின் போர்க்குற்றங்களுக்கும், அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கும் ஆதரவாக இந்திய அரசு நடந்து கொள்கிறதோ என்ற வேதனையைத் தருகிறது”** என்று அறிக்கை வெளியிட்டார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவும், பா.ஜ.க. அரசின் முடிவு தமிழ்நாடு மக்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக குறிப்பிட்டார்.

* பிரதமர் நரேந்திரமோடியை அதிகமாகப் புகழ்ந்தவர் இலங்கைப் பிரதமர் ராஜபக்சேதான் என்பதை மறுக்க முடியுமா? **“என்னுடைய டெல்லி பயணம் சிறப்பு வாய்ந்ததாகும். என்னுடைய சகோதரரும், இலங்கை அதிபருமான கோத்தபய ராஜபக்சே சந்திப்பின்போது 2 நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவுக்காக போடப்பட்ட அஸ்திவாரம் இப்போது மேலும் வலுவடைந்துள்ளது. பிரதமர் மோடி உடனான சந்திப்பு மிகவும் பயன் உள்ள சந்திப்பாக அமைந்தது. அவர் என்னிடம் மிகவும் நெருக்கமான நட்பை காட்டினார். நான் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது கார் வரை வந்து வழியனுப்பி வைத்தார். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு மேலும் வலுவடைந்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே இருந்த வேற்றுமைகள் களையப்பட்டுவிட்டன. நல்ல புரிந்துணர்வு மற்றும் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயுள்ள கூட்டுறவு, பிராந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதிலும் இரு நாடுகளும் நல்ல பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன”** என்று சொன்னவர் ராஜபக்சே!

தொடரும்

## ஆவடியில் புதிய சாலை அமைக்கும் பணி!

திருவள்ளூர், ஆக. 2 –

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் நகராட்சி வளாகத்தில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் 13 மின்இயங்கு வாகனம் மற்றும் 2 இலகுரக வாகனங்கள் மற்றும் கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 14வது திருவேங்கடநகர் முதல் மெயின் ரோட்டில் சாலை 3.5 கிலோமீட்டர் 2 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி களையும் முன்னாள் அமைச்சரும், மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இதில் நகர் மன்றத் தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் புகேந்திரி, நகராட்சி பொறியாளர் ருத்ரகோட்டி, நகரக் கழகச் செயலாளர் தி.வை.இரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பா.நரேஷ்குமார், துணைத் தலைவர் சரளாநாகராஜ் உள்பட நகர கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், காட்பாடி வி.ஐ.டி. பல்கலைக் கழக வளாகத்தில் 31.07.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் 7வது ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப் 2023 போட்டிக்கான கோப்பையை அறிமுகப்படுத்தி பாஸ் தி பால் ட்ராப்பியை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், திருமதி அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், ஹாக்கி யூனிட் ஆஃப் தமிழ்நாடு தலைவர் சேகர் ஜெ.மனோகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கர்நாடக இசையரசி

## எம்.எஸ்.சுப்புலட்சுமியின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியிட திட்டம் உள்ளதா?

### நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு கேள்வி



புதுடெல்லி, ஆக. 2 –

தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கர்நாடக இசைக் கலைஞர் திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலாக வெளியிட ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா என்று தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள்,மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

31.7.2023 அன்று இந்த பொருள் தொடர்பாக டி.ஆர். பாலு எழுப்பிய கேள்வியின் விவரம் பின்வருமாறு:–

புகழ் பெற்ற இந்துஸ்தானி இசைக் கலைஞர் பீம்சென் ஜோஷி அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ளதா? அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன? அதைப்போல கர்நாடக இசைக் கலைஞர் திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி உள்ளிட்ட தலைசிறந்த கலைஞர்களின் சுயசரிதை அல்லது வாழ்க்கை வரலாற்று நூல்களையும் வெளியிட அரசு திட்டம் வைத்துள்ளதா?

**சிறப்பு திட்டம் ஏதேனும் உள்ளதா?**

இசை உள்ளிட்ட ஏனைய கலைகளில் புகழ்பெற்ற கலைஞர்கள் கலைத்துறைக்கு அளித்துள்ள மாபெரும் பங்களிப்பைப் போற்றிடும் வண்ணம் சுயசரிதை உள்ளிட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களை வெளியிட ஒன்றிய அரசு ஏதேனும் சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளதா? அப்படி என்றால் அதன் விவரம் என்ன? என்று டி.ஆர்.பாலு அவர்கள் கேள்வி எழுப்பியதற்கு,

**ஒன்றிய அமைச்சர் கிஷன் ரெட்டி பதில் வருமாறு:-**

இந்தக் கேள்விக்கு 31.7.2023 அன்று மக்களவையில் எழுத்துப்பூர்வ பதில் அளித்த ஒன்றிய கலாச்சாரம், சுற்றுலா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சித் துறையின் அமைச்சர் கிஷன் ரெட்டி அளித்த பதிலில் தெரிவித்த விவரம்: பீம் சென் ஜோஷி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் அரசால் வெளியிடப்படவில்லை. ஆனால், மாபெரும் சாதனைகள் படைத்த கலைஞர்கள் பற்றிய சிறிய நூல்களை வெளியிடும் திட்டம் ஒன்றை ஒன்றிய அரசு தீட்டியுள்ளது. அதன் தொடக்கமாக, சங்கீத நாடக அகாடெமியால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ‘பர்ஃபாமிங்க் ஆர்ட்ஸ்’ எனப்படும் பல்துறை கலைவிற்பன்னர்களின் சுயசரிதை மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளியிடப்படும் என்று ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டார்.

### சிலை கடத்தல் வழக்கு!

## தலைமறைவு குற்றவாளிகளுக்கு ஜாமீன் மறுப்பு!

### வழக்கறிஞர் நம்பிசெல்வன் - வாதத்தை ஏற்று மதுரை உயர்நீதி மன்றம் உத்தரவு!

*மதுரை, ஆக. 2 -*

*சிலை கடத்தல் வழக்கில் தலைமறைவாக உள்ளவருக்கு முன்ஜாமீன் அளிக்க முடியாது என்று மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.*

*மதுரை மாவட்டம் சமயநல்லூர் அய்யனார் புரத்தில் அய்யனார் கோவில் உள்ளது. கடந்த 2015ம் ஆண்டில் இந்த கோவிலில் இருந்த பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சிலைகள், பூஜை பொருட்கள் உள்ளிட்டவை திருடப்பட்டன.*

*இந்த சம்பவம் குறித்து மதுரை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.*

*விசாரணையில் இதே பகுதியைச் சேர்ந்த சிலர் சிலைகளை கடத்தியது தெரிந்தது. ஒரே ஒரு சிலையை மட்டும் போலீசார் மீட்டனர்.*

*இதுதொடர்பாக தேனி மாவட்டம் போடிநாயக்கனூரைச் சேர்ந்த ஈஸ்வரன் உள்ளிட்ட சிலர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.*

*இந்த வழக்கில் அவர் தனக்கு முன்ஜாமீன் கேட்டு மதுரை உயர்நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.*

*அந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.*

*அப்போது கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நம்பிசெல்வன் ஆஜராகி, திருட்டு போனதில் ஒரு சிலை மட்டுமே மீட்கப்பட்டு உள்ளது. இன்னும் 2 சிலைகள் எங்கு பதுக்கி வைக்கப்பட்டு உள்ளன? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.*

*தலைமறைவாக உள்ள மனுதாரரை காவலில் வைத்து போலீசார் விசாரித்தால்தான் அந்த சிலைகளை மீட்க முடியும். எனவே அவருக்கு முன்ஜாமீன் அளிக்கக்கூடாது என ஆட்சேபம் தெரிவித்தார். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரருக்கு முன்ஜாமீன் அளிக்க முடியாது எனக் கூறி, மனுவை தள்ளுபடி செய்தார்.*

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (3)!

### நாளை (ஆகஸ்ட் 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஆகஸ்ட் 3 அன்று முரசொலி சிறப்பிதழ், “பத்திரிகையாளர் - ஊடகவியலாளர் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**


அரசு முறைப்பயணமாக கனடா சென்றுள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் 31.07.2023 அன்று, ஒட்டாவா மாகாணத்தில் கார்சொனோபி கிராமத்தில், சோயா மொச்சை, மக்காச்சோளம், கோதுமை, ஓட்ஸ் பயிர்களையும் மற்றும் பழவகைகள் பயிரிடும் முறைகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். உடன், வேளாண்மை உற்பத்தி மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் பிருந்தா தேவி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வி.கீதாலட்சுமி மற்றும் வேளாண் பல்கலைக்கழக இயக்குநர்கள் உள்ளனர்.